**அ.வ.எண். 199/2021**
**பி.வா.சா.1 : கோகுலகண்ணன்**
**தேதி : 18.03.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>2, 6 முதல் 8, 10, 11, 14, 15 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நடராஜபிள்ளையும், தனுஸ்கோடி என்பவரும் கணவர் மனைவி என்றால் சரிதான். நடராஜபிள்ளையும், சேதுரத்தினம்பிள்ளையும் சகோதரர்கள் என்றால் சரிதான். நடராஜபிள்ளை, தனுஸ்கோடி ஆகியோரின் மகள் பத்மாவதி என்று சொன்னால் பத்மாவதி என் தாயார். பத்மாவதிக்கு உடன்பிறந்தவர்கள் யாரும் கிடையாது என்றால் சரிதான் என்னை ஆண்வாரிசு இல்லாததால் என்னை நடராஜபிள்ளையும், தனுஸ்கோடியம்மாளும் தத்தெடுத்துக்கொண்டார்கள். எனது அம்மாவிற்கும், எனக்கும் சகோதரர் முறையும் ஏற்பட்டது. பத்மாவாதியும் நீங்களும் 31.03.2011 ஆம் தேதியில் ஒரு பாகப்பிரிவினை செய்து கொண்டீர்கள் என்றால் சரிதான். பத்மாவதிக்கும் எனக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்களை நாங்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டோம். நானும் பத்மாவதியம்மாளும் செய்து கொண்ட பாகப்பிரிவினை சொத்துக்களில் எனது உடன் பிறந்தவர்களுக்கு உரிமை இல்லை. நான் ஏபிடி பார்சல் சர்வீசில் 15 வருடங்களாக திருச்சி தில்லை நகரில் வேலை பார்த்தேன். தாவா சொத்துக்கள் உங்களுக்கு பாகப்பிரிவினையின் மூலம் பிரிந்த சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்தவரை சங்கர் என்ற 3ம் பிரதிவாதிக்கும், தங்கவேல் என்ற 4ம் பிரதிவாதிக்கும் அடமானம் வைத்திருந்தோம் என்று சொன்னால் சரிதான். 3ம் பிரதிவாதியிடமிருந்து 2 லட்சமும், 4ம் பிரதிவாதியிடமிருந்தது 3 லட்சமும் கடன் வாங்கியிருந்தேன். 04.11.2019, 28.11.2019 ஆகிய தேதிகளில் அடமானப்பத்திரங்கள் மூலம் கடன்

வாங்கியிருந்தேன். மேற்சொன்ன இரண்டு ஆவணங்களும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள். நான் பதிவாளர் அலுவலகத்தில் சென்று பதிவு செய்து கொடுத்தேன். மேற்சொன்ன பத்திரங்களில் 100 க்கு 2 ரூபாய் வட்டி என போட்டு எழுதப்பட்டுள்ளது. மேற்சொன்ன ஈட்டு பத்திரங்களின் நகல்களை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன். அந்த பத்திரங்களில் வட்டிக்கு ஈடாக சொத்துக்களை அனுபவிக்க வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. மேற்சொன்ன ஈட்டு பத்திரங்களை நான் தான் வைத்திருந்தேன். அந்த இரண்டு ஈட்டுபத்திரங்களை வைத்திருந்தது பற்றி பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். எனக்கும் 3, 4 பிரதிவாதிகளிடையே ஈட்டு பத்திரங்களை தவிர வேறு ஆவணங்கள் எதுவும் ஏற்படவில்லை. தாவா சொத்துக்களை 3, 4 பிரதிவாதிகளுக்கு நான் குத்தகைக்கு விடவில்லை. 3, 4 பிரதிவாதிகளுக்கும் எனக்கும் இடையே எந்த விரோதமும் இல்லை. 3, 4 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த ஈட்டு பத்திரங்களை நான் தீர்க்கவில்லை நிலத்தினை விலைக்கு வாங்கிய வர்ஷினி என்பவர் தீர்த்தார். மேற்சொன்ன ஈட்டு பத்திரத்தில் தீர்த்த பிறகு அதில் சுவாதீனம் கொடுத்துவிட்டதாக கண்டுள்ளது. 3, 4 பிரதிவாதிகள் ஈட்டு பத்திரத்தினை தீர்த்தற்காக ரசீது பெற்றுள்ளார்கள். அந்த ரசீது தாவா சொத்தின் சுவாதீனம் 3, 4 பிரதிவாதிகள் திரும்ப ஒப்படைத்தார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. அந்த ரசீதுகளை நான் தாக்கல் செய்துள்ளேன். அந்த ரசீதுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ரசீதுகளில் நான் கையெழுத்து போட்டுள்ளேன். தாவா சொத்தின் சுவாதீனம் 20.06.2020 தேதியில் என்னிடம் வந்தது. தாவா சொத்துக்களுக்குண்டான பட்டா என் பெயரில் தான் உள்ளது. எனக்கும் என் உடன்பிறந்தவர்களுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. நான் திருச்சியில் அண்ணாமலை நகரில் குடியிருக்கிறேன். 6, 7 பிரதிவாதிகளான எனது மகள்கள் என்னுடன் திருச்சியில் வசிக்கிறார்கள். 2ம் பிரதிவாதி என் மனைவி என் வீட்டில் என்னுடன் தான் இருக்கிறார். வாதி மணிமேகலைக்கு

இரண்டு மகன்கள். ஒரு மகன் பெயர் பாபு என்ற சிவக்குமார். மற்றொருவர் பெயர் அமுதவேல். வாதி மற்றும் அவரது மகன்கள் எனது குடும்ப நண்பர்கள். வாதியிடம் நான் கடன் வாங்கியதில்லை. பாபு என்ற சிவக்குமார் எனது நண்பர். வா.சா.1 ம் நானும் பக்கத்து தோட்டத்துக்காரர்கள் மேலும் அவர் எனது நெருங்கிய நண்பர். பாபு என்ற சிவக்குமாரிடம் நான் 10 லட்ச ரூபாய் கடன் கேட்டேன். 3, 4 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த ஈட்டுக்கடன் பெற்றதற்கு பின்னிட்டு நான் பாபு என்ற சிவக்குமாரிடம் கடன் கேட்டேன். நான் படிப்பு செலவிற்காக கடன் கேட்டேன். நீங்களும், 3, 4 பிரதிவாதிகளும் 02.07.2020 ஆம் தேதியில் வாதி கொடுத்த அறிவிப்புக்கு பதிலறிவிப்பு கொடுத்துள்ளேன். அந்த அறிவிப்பு ஏற்கனவே வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 10 லட்ச ரூபாயை என் மகள் ஒவ்வொருவருக்கும் ஐந்தைந்து லட்சமாக தனித்தனியாக போஸ்ட் ஆபிசில் டெபாசிட் செய்தார்கள் என்றால் செய்தார்கள் நான் படிப்பு செலவிற்காகத்தான் பணம் கேட்டேன் டெபாசிட் செய்ய சொல்லி கேட்கவில்லை. வாதியும், பாபுவும் என்னிடம் டெபாசிட் செய்த விவரத்தை கூறவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உங்கள் கையொப்பம் உள்ளதா என்றால் உள்ளது. **வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் உள்ள 8 கையொப்பங்களும் என்னுடையதுதான். அவை வா.சா.ஆ.19 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது** மேற்சொன்ன கையொப்பங்களை மது ஊத்தி கையொப்பங்கள் பெற்றார்கள் மேலும் பதிவாளர் சொல்லித்தான் கிரையம் என்ற விவரம் தெரியும் மேலும் பதிவாளரிடம் பாபு என்ற சிவக்குமார் லஞ்சம் தருகிறேன் என்று பதிவாளரிடம் சொன்னதால் பதிவாளர் பாபுவிடம் உன்னை காவல்துறையில் சொல்லி புகார் கொடுத்துவிடுவேன் என்று சொன்னால் மேலும் பதிவாளர் பாபுவை வெளியே செல்லுமாறும் கூறினார். மேலும் ரிஜிஸ்டர் ஐயா சொல்லித்தான் தெரியும். (சாட்சியிடம் உரிய முறையில் கேள்விக்கு பதில் அளிக்கும் படி பல முறை சொல்லியும் அவர் தானாக கேட்ட கேள்விக்கு பதில்

அளிக்காமல் தொடர்ந்து மேற்சொன்னவாறு பதில் அளித்துள்ளார்.) வா.சா.ஆ.2 ஆவணத்தில் என் மனைவியின் கையொப்பம் உள்ளது. உங்கள் வா.சா.ஆ.14 பதிலறிவிப்பில் பாபு என் வாயில் மது ஊத்திவிட்டு பிறகு பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்துச்சென்றார் என்ற விவரத்தை கூறியுள்ளீரா என்றால் கூறியுள்ளேன். (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

சார்பதிவாளர் காவல்துறையில் மேற்சொன்ன சம்பவம் குறித்து புகார் தெரிவித்துள்ளாரா என்றால் சார்பதிவாளர் புகார் கொடுத்தாரா என்று தெரியாது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.18 17:59:10 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.